

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பொற்கரங்கலால் திறந்து வைக்க உள்ள சுதந்திர போராட்ட தியாகி மாவீரன் பொல்லான் அவர்களின் மணிமண்டப பணிகளை வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி பார்வையிட்டு ஆய்வு செய்தார். நிகழ்வில் மாநிலங்களவை உறுப்பினரும், கழக துணைப் பொதுச் செயலாளருமான அந்தியூர் ப.செல்வராசு, ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், கழக நெசவாளர் அணி செயலாளர் எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தம்,மாவட்டத் துணைச் செயலாளர் ஆ.செந்தில்குமார், மொடக்குறிச்சி மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் சு.குணசேகரன் உள்ளிட்ட பேரூர் கழக செயலாளர்கள், கழக நிர்வாகிகள், பொல்லான் வாரிசுதாரர்கள் ,கூட்டணி கட்சித் தலைவர்கள் பலர் உள்ளனர்.



திராவிட மாடல் ஆட்சியில் கோவைக்கு மேலும் ஒரு பெருமையாக, கோவை, மத்திய சிறைச்சாலை மைதானத்தில் 45 ஏக்கர் பரப்பளவில் ரூ.167.25 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள செம்மொழி பூங்காவை, கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள், பொதுமக்கள் பயன்பாட்டுக்கு திறந்து வைக்கவிருக்கும் நிலையில் செம்மொழி பூங்காவில் நடைபெறும் பணிகளை கழக மேற்கு மண்டல பொறுப்பாளர் வி.செந்தில்பாலாஜி முன்னிலையில் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு ஆய்வு மேற்கொண்டார். இதில் நகராட்சி நிர்வாக இயக்குநர் ப.மதுசூதன் ரெட்டி, மாவட்ட ஆட்சியர் பவன்குமார் ஜி.கிரியப்பனவர், ஆணையாளர் மா.சிவகுரு பிரபாகரன், கோவை மாநகர் மாவட்டப் பொறுப்பாளர் துரை.செந்தமிழ் செல்வன், கோவை வடக்கு மாவட்டக் கழக செயலாளர் தொண்டாமுத்தூர் அ. ரவி, தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன், கழக தீர்மானக்குழு செயலாளர் நா.கார்த்திக், கழக மாணவர் அணி செயலாளர் வழக்கறிஞர் இரா.ராஜீவ் காந்தி, மாவட்ட துணை செயலாளர்கள் கோட்டை அப்பாஸ், ஆறுக்குட்டி, மாநகராட்சி மேயர் கா.ரங்கநாயகி ராமச்சந்திரன், துணை மேயர் வெற்றிச் செல்வன் உள்பட கழக நிர்வாகிகள், அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### துணை முதல்வர் பிறந்தநாளையொட்டி விளையாட்டுப் போட்டிகள்!

# கழகம் வெற்றி பெற்று முதல்வராக மு.க.ஸ்டாலின் மீண்டும் பொறுப்பேற்பார்!

## கரூரில் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. தகவல்!

கரூர்.நவ.17.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு வீரர், வீராங்கனைகள் வெளிநாடுகளுக்கும் சென்று விளையாடும் வகையில் டிசம்பர் மாதம் வரை கரூரில் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட இருக்கின்றன. மீண்டும் கழகம் வெற்றிபெற்று மு.க. ஸ்டாலின் அவர்கள் தான் முதல்வராக பொறுப்பேற்பார்கள் என கரூரில் வி.செந்தில் பாலாஜி தெரிவித்தார்.

திமுக இளைஞரணி செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு கரூர் மாவட்ட திமுக சார்பில், ஆண், பெண் அணிகளுக்கான சிலம்ப போட்டி நடைபெற்றது. கரூர் திருவள்ளுவர் விளையாட்டு மைதானத்தில் பெண்களுக்கான சிலம்பம் போட்டியை கரூர் மாவட்ட செயலாளர் வி. செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ துவக்கி வைத்தார்.

பின்னர் செந்தில் பாலாஜி செய்தியாளர்களிடம் கூறியதாவது:

கழக இளைஞரணி செயலாளர்,



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு இன்று தொடங்கி டிசம்பர் மாதம் வரை தொடர் விளையாட்டு போட்டிகள் நடைபெற உள்ளது. மகளிர் சிலம்பம், ஆடவருக்கான சிலம்பம் போட்டிகள் தொடர்ந்து கபடி, வாலிபால், கிரிக்கெட், உள்ளிட்ட பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் நடைபெற உள்ளன. கரூர் மாவட்ட விளையாட்டு வீரர்கள் வீராங்கனைகளை ஊக்குவிக்கும் வகையிலும், அவர்கள் மேலும் மாநில அளவிலும் வெளிநாடுகளுக்கும் சென்று விளையாடி தமிழ்நாட்டிற்கு பெருமை சேர்க்கின்ற வகையில், தேவையான உதவிகளையும் செய்து சிறப்பு கவனம் செலுத்தி வருகிறோம்.

முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு ஏற்கனவே பள்ளி, கல்லூரிகள் அளவில் விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டன. துணை முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளையொட்டி அனைத்து தரப்பினரும் பங்கேற்கின்ற வகையில் மாபெரும் விளையாட்டு திருவிழா நடத்தப்படுகிறது. சிலம்பம் போட்டிக்கு மொத்தம் 49 லட்சம் ரூபாய் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

பீகார் தேர்தல் குறித்து அவரவர் கருத்துக்களை தெரிவித்து வருகின்றார்கள். இருப்பினும், தமிழ்நாட்டைப் பொருத்தவரையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திட்டங்கள், சாதனைகள், ஏழை எளிய அடித்தட்டு மக்களின் நலனை பாதுகாக்க கூடிய வகையில், வழி நடத்தி வருகின்றார்கள். தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர், வழியில் நமது முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெறுகின்ற ஆட்சி தான் மீண்டும் அமையும். தொடர்ந்து இரண்டாவது முறையாக முதலமைச்சராக பதவி ஏற்க உள்ளார்கள்.

கரூர் வெண்ணைமலை கோவில் நில விவகாரத்தில் முந்தைய ஆட்சியாளர்கள் செய்த தவறு பெரிய பிரச்சனையாக ஆகி உள்ளது. தீர்வு காண முடியாத அளவுக்கு குழப்பத்தை உருவாக்கி இருக்கிறார்கள். அதிமுக ஆட்சியில் 2018 19 ம் ஆண்டுகளில் கோர்ட்டில் தாக்கல் செய்த ஆவணங்கள் குளறுபடிகளோடு தாக்கல் செய்யப்பட்டதால் 2019 ஆம் ஆண்டு கோர்ட் உத்தரவை பிறப்பித்தது.

குளறுபடியான ஆவணங்களை தாக்கல் செய்து குடியிருப்போருக்கு பிரச்சனையை ஏற்படுத்திவிட்டு, அங்கு போய் நாங்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் உங்கள் பிரச்சினையை தீர்ப்போம் என்று பொய் பிரச்சாரம் செய்கிறார்கள்.

இன்று வரை மக்களுக்கு தேவையான சட்ட உதவிகளை நாம்தான் செய்து வருகிறோம். கலெக்டர், எஸ்.பி என அதிகாரிகளுக்கு பல்வேறு உத்தரவுகள் பிறப்பிக்கப்படு கிறது.

**444 ஓட்டு வித்தியாசத்தில் வென்றவர்**

**420 ஆக வேலை செய்கிறார்**

கடந்த ஆட்சியில் இந்த இடங்கள் கோவில் நிலங்களாக மாற்றப்பட்டது. அதிமுக ஆட்சியில் வருவாய் மற்றும் அறநிலையத்துறை சார்பில் தாக்கல் செய்யப்பட்ட குளறுபடியான ஆவணங்களே பிரச்சனைக்கு காரணம். எனினும் உச்ச நீதிமன்றம் வரை சென்று பாதிக்கப்பட்டோருக்கு சாதகமாக முயற்சிகளை நாங்கள் எடுத்துள்ளோம். அப்பகுதி மக்களுக்கு சமூகத் தீர்வை ஏற்படுத்த வேண்டும் என்பதே அரசின் நோக்கம். ஒரு குழு அமைத்து ஆவணங்களை ஆராய்ந்து யாருக்கெல்லாம் இடம் சொந்தம் என்பதை கண்டறிய நீதிமன்ற உத்தரவு பெற முயற்சியை முன்னெடுத்து இருக்கின்றோம்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களது பொற்கால ஆட்சியில் வெண்ணமலை இட பிரச்சனைக்கு தீர்வு எட்டப்படும்.

444 ஓட்டுகளில் ஜெயித்தவர்கள் செய்த குளறுபடிகள், தவறுகள் காரணமாக மக்களை இந்த நிலைக்கு தள்ளிவிட்டதோடு, ஆட்சியில் இருந்தபோது எந்த விதமான வளர்ச்சித் திட்ட பணிகளையும் செய்யாமல், முழுவதுமாக அநீதி இழைத்து விட்டு, இப்போது இப்படி பொய் பிரசாரம் செய்வதை ப்ஃபோர்ட்வென்டி (420) என்று தான் சொல்ல வேண்டும். அதிமுக ஆட்சியில் இழைக்கப்பட்ட அநீதிகளை களைந்து மக்களுக்கு நியாயம் கிடைக்க திமுக ஆட்சி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

கடந்த ஆட்சியில் யார் இந்த குளறுபடிகளை செய்தார்களோ, யார் தவறான ஆவணங்களை தாக்கல் செய்தார்களோ, யார் இப்போது மக்களிடம் சென்று உங்களுக்கு நியாயம் கிடைக்கச் செய்வோம் என்று கூறினார்களோ, அவர்களே தான் வழக்கு போட்டவருக்கு முழு உதவியும் செய்தார்கள் என்பது மக்களுக்கு தெரியும்.

கரூர் தொகுதியில் அதுவும் வெண்ணை மலையில் மட்டும் தான் கோவில் நிலம் பிரச்சினை இருக்கிறதா?. வேறு எங்கும் இல்லையா?. வழக்கு நடத்துபவருக்கு தேவையான உதவிகள் அனைத்தையும் செய்தவர்கள் அதிமுகவினர் தான். இந்தப் பக்கம் வழக்கு போட்டு பிரச்சினை ஏற்படுத்துவது, அந்தப் பக்கம் வந்து மக்களை சந்தித்து ஆட்சிக்கு வந்தால் தீர்வு காண்போம் என்பது. ஒரு பக்கம் பிள்ளையை கிள்ளிவிட்டு மறுபக்கம் தொட்டிலையும் ஆட்டுகிறார்கள். ஏதோ ஒரு குழப்பத்தை ஏற்படுத்தி வாக்குகளை பெற்று விடலாம் என நினைக்கிறார்கள். ஆனால் மக்களோ எப்படியாவது இடத்தை காப்பாற்ற வேண்டும் என எண்ணுகிறார்கள். அவர்களுக்கு நாங்கள் துணை நிற்போம்.

இவ்வாறு செந்தில் பாலாஜி கூறினார்.

கழக மாநில நிர்வாகிகள் நன்னியூர் ராஜேந்திரன், என்.மணிராஜ், பரணி கே.மணி, எம்எல்ஏக்கள் இரா. மாணிக்கம், பிஆர்.இளங்கோ, க.சிவகமசுந்தரி, மற்றும் முனவர் ஜான், வே.பல்லவி ராஜா, பி.விஜய குமார், கரூர் மேயர் கவிதா கணேசன், துணை மேயர் தாரணி சரவணன், கரூர் மாவட்ட கழக நிர்வாகிகள் டி.ராஜேந்திரன், எம் எஸ்கே. கருணாநிதி, பூவை ரமேஷ் பாபு, மகேஸ்வரி சுப்பிரமணி, பாரத், செயற்குழு உறுப்பினர்கள் சுப. ராஜகோபால், காலனி செந்தில், ஆண்டாள் பாலகுருபரன், எம். துரைராஜ், சாலை சுப்பிரமணி, என்.செல்வராஜ், கரூர் மாநகர செயலாளர் எஸ்பி. கனகராஜ், பகுதி கழக செயலாளர்கள் க. சுப்பிரமணியன், கோல்ட் ஸ்பாட் ஆர்எஸ்.ராஜா, ஆர். ஜோதிபாசு, விஜிஎஸ்.குமார், எம். பாண்டியன், ஒன்றிய கழகச் செயலாளர்கள் இ.ராமர், எம்எஸ்.மணியன், கே. கருணாநிதி, எம்.ரகுநாதன், ஜி.அண்ணாதுரை, அ. சந்திரன், கே.ரவிராஜா, கே.பாஸ்கரன், எம். ராமலிங்கம், எஸ்.சுதாகர், என் மணிகண்டன், த. கார்த்திக், சி.வளர்மதி, பி முத்துக்குமாரசாமி, வி.கே.வேலுச்சாமி, எல்.கரிகாலன், ப. தியாகராஜன், சி.கதிரவன், புகழூர் நகர செயலாளர் அ.குணசேகரன், பள்ளப்பட்டி நகர பொறுப்பாளர் வாசிம் ராஜா,

பொதுக்குழு உறுப்பினர்கள் என் எஸ்.ஆறுமுகம், வி .கருப்பண்ணன், விகேடி.ராஜ்கண்ணு, எஸ்டேட் வேலுச்சாமி, கே சாமிநாதன், சி. கருப்பையா, பிபி சரவணன், இ.ஜாபருல்லா, சிவகாமி சண்முகம், எஸ் காளியப்பன், எம்.சிவசாமி, ஏ. நஞ்சுண்டேஸ்வரன், என்.ராமலிங்கம், சிவகாமசுந்தரி, கலாவதி சக்திவேல், பிஏ.குமார், பேரூர் செயலாளர்கள் கே.அம்மையப்பன், கே. முரளிராஜா, இ.ரவீந்திரன், ஆர்.மோகன்ராஜ், எம். சசிகுமார், எம்.முத்து, சி.தங்கராஜ், பிஎஸ்.மணி மற்றும் பலர் பங்கேற்றனர்.

### மதுக்கரை கிழக்கு ஒன்றியச் செயலாளர்

## விஜயசேகர் மறைவு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல் !

கோவை, நவ. 17 –

கோவை தெற்கு மாவட்டம், கிணத்துக்கடவு, சட்டமன்றத் தொகுதி மதுக்கரை கிழக்கு ஒன்றிய செயலாளர் விஜயசேகர் அவர்கள் உடல்நலக் குறைவால் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாரது மறைவு செய்தி அறிந்து, கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது ஆழ்ந்த இரங்கலை அன்னாரது குடும்பத்தாருக்கு தெரிவித்துள்ளார்.




தருமபுரி மேற்கு மாவட்ட திமுக அலுவலகத்தில் நடைபெற்ற அவசர செயற்குழு கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் சிறப்பு தீவிர வாக்காளர் திருத்தம் (S.I.R) பற்றி காணொலி காட்சி வாயிலாக வாக்குச்சாவடி முகவர்கள் செயலாற்றுவது பற்றி வழங்கிய ஆலோசனைகளை எடுத்துரைத்தார். உடன் கே.மனோகரன், அரியப்பன், சத்தியமூர்த்தி, வழக்கறிஞர்.சந்திரசேகர் மற்றும் கழகத்தினர் பங்கேற்றனர்.



நாகை மாவட்டம் கீழ்வேளூர் அஞ்சுவட்டத்தம்மன் மகளிர் உயர்நிலைப் பள்ளியில் நடைபெற்று வரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகளை நாகை மாவட்ட கழக செயலாளர் என்.கௌதமன் பார்வையிட்டார். உடன் கீழ்வேளூர் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் இரா.சங்கர், தலைமை செயற்குழு உறுப்பினர் கீழ்வேளூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் ப. கோவிந்தராஜன், கீழ்வேளூர் பேரூர் கழக செயலாளர் கா.அட்சயலிங்கம் கழக நிர்வாகிகள் நடராஜன், ரமேஷ்குமார், ராஜகோபால் மற்றும் பலர் உள்ளனர்




திருவாரூர் மாவட்ட திமுக இளைஞரணி ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் ஆலோசனை கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் பூண்டி கே கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமை ஏற்று பேசினார். மாநில இளைஞரணி துணை செயலாளர் , தாட்கோ தலைவர் நா. இளையராஜா ஒன்றிய கழக செயலாளர்கள் புலிவலம் ஏ.தேவா , சேகர்கலியபெருமாள், பேரூர் கழக செயலாளர் பூண்டி கே கலைவேந்தன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பனங்குடி ஏ.எஸ்.குமார் ,துணை அமைப்பாளர்கள் வி.கே. முருகானந்தம், வினோத்குமார், எம்.பி.எடிசன்,சி.கே.எழிலரசன்,எஸ். கல்யாணசுந்தரம், தாகிர் அலி ஆகியோர் பங்கேற்றனர்.



மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோயில் ஒன்றியம் திருக்கடையூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஊரக வளர்ச்சித் துறை சார்பில் ஊராட்சிகளுக்கு பேட்டரியால் இயங்கும் குப்பைகள் சேகரிக்கும் வாகனத்தை ஊராட்சிகளுக்கு மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம். முருகன், மாவட்ட ஆட்சித் தலைவர் எஸ்.ஸ்ரீகாந்த் ஆகியோர் வழங்கினார்கள். உடன் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் எம். சித்திக், ஒன்றிய கழக செயலாளர்கள் அமிர்த. விஜயகுமார் எம்.அப்துல்மாலிக், மாவட்ட இளைஞரணி முன்னாள் துணை அமைப்பாளர் எழில்நம்பி மற்றும் மாரியப்பன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### முன்னாள் ஒன்றிய அமைச்சர்

### டி.ஜி. வெங்கட்ராமன் புதல்வர்

## வழக்கறிஞர் அரவிந்தன் மறைவு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, நவ.17–


முன்னாள் ஒன்றிய தரை வழி போக்குவரத்து துறை அமைச்சர் – மூத்த வழக்கறிஞர் டி.ஜி. வெங்கட்ராமன் அவர்களின் இரண்டாவது மகனும், மூத்த வழக்கறிஞருமான டி.ஜி.வி.அரவிந்தன், (வயது – 61) அவர்கள் 15.11.2025–சனிக்கிழமையன்று அதிகாலை சுமார் 2.00 மணியளவில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.இவருக்கு தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையில் செஞ்சியில் திருமணம் நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

தகவல் அறிந்து கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது ஆழ்ந்த இரங்கலை அன்னாரது குடும்பத்தாருக்குத் தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## பூண்டி கே. கலைச்செல்வன்

### நவம்பர் 17 (2007)



திருவாரூர் மாவட்டக் கழகச் செயலாளராகவும், திருவாரூர் மாவட்ட ஊராட்சிக்குழு துணைத் தலைவராகவும் பணியாற்றியவர்.

மாவட்டத்தின் கழகத் தோழர்களுக்கெல்லாம் தோன்றாத் துணையாக விளங்கி, திருவாரூர் மாவட்டத்தில் கழகம் மேன்மேலும் பீடுநடை போட தளர்விலாது பணியாற்றியவர். கொடியோர் சிலரால் படுகொலைக்கு ஆளானார்.

"சுழன்று சுழன்று கழகப் பணியாற்றிய வந்த காளை" என தலைவர் கலைஞரால் பாராட்டப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**